OS: 656/2018

Date: 22.10.2025

பெயர் : மாரியப்பன் **(பி.வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதியும், பிரதிவாதியும் உறவினர்களா என்றால் ஆமாம். வாதி, பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்துக்களை பொறுத்து பட்டா அவரவர் பெயரில் இருக்கிறது என்றால் ஆமாம்.

**<u>8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை யார் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது என்றால் பிரதிவாதி ராஜ்மோகன் அழைத்து வந்தார். நான் 2ம் பிரதிவாதி கோவிந்தனின் உடன்பிறந்த அக்கா மகன் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி எனது தாய்மாமா என்றால் ஆமாம். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 80 வயது ஆகிறது.

2. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தலைமை ஆசிரியராக வேலை செய்தேன். என்ன தேதி, எந்த வருடத்தில் ஓய்வு பெற்றேன் என்றால் 30.06.2004ம் தேதியன்று ஓய்வு பெற்றேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகளை நன்கு தெரியும் என்றால் தெரியும், அந்த ஊரில் எனக்கு விவசாய நிலமும், வீடும் இருக்கிறது. என்ன சர்வே எண்ணில், என்ன பட்டாவில், எவ்வளவு விஸ்தீரண நிலம் இருக்கிறது என்றால் சர்வே எண்.40/3-ல் 1 ஏக்கர் 70 செண்ட் நிலமும், சர்வே எண்.39/6ல் 52 செண்ட் நிலமும் இருக்கிறது.

3. நான் எனது பெயரில் மேற்கண்ட நிலங்கள் இருக்கிறது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

வாதி, பிரதிவாதியின் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். என்ன சர்வே எண்ணில் உள்ள எவ்வளவு விஸ்தீரண பூமிக்கு என்ன பரிகாரம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் வாதிக்கு 17 சர்வே எண்களில் பூமி இருக்கிறது. பிரதிவாதிக்கு 10 சர்வே எண்ணில் பூமி இருக்கிறது. 27 சர்வே எண்ணையும் என்னால் சொல்லமுடியாது. நினைவிருப்பதை சொல்கிறேன். 37/2Aன் விஸ்தீரணம் 25 செண்ட் ஆகும். அதில் வீரமுத்து ஓட்டுவீடு கட்டி குடியிருக்கிறார். ச.எண்.37/2பில் வாதியின் தந்தை கந்தசாமி ஓட்டுவீடு கட்டி குடியிருந்து வந்தார். தற்போது அதை அவரது மகள் ருக்குமணிக்கு கொடுத்துவிட்டதால் ருக்குமணி குடியிருந்து வருகிறார். அதன் விஸ்தீரணம் 20 செண்ட் ஆகும். சர்வே எண்.37/3ல் பிரதிவாதியின் பாட்டி அய்யம்மாள் சுமார் 80 செண்ட் பூமியில் ஓட்டுவீடு கட்டி குடியிருந்து வந்தார்.அய்யம்மாள் இறந்துவிட்டதால் தற்போது பிரதிவாதி குடியிருக்கிறார். சர்வே எண்.37/7 ஆனது அய்யம்மாளுக்கு பாத்தியப்பட்டது அதன் விஸ்தீரணம் சுமார் 17 செண்ட் இருக்கும். சர்வே எண்.37/5 பிரதிவாதியின் பாட்டி அய்யம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்தீரணம் 10 செண்ட் இருக்கும். இவைகள் மட்டுமே நினைவிருக்கிறது.

4. 27 சர்வே எண்களில் உள்ள 3ஏக்கர் 12 செண்ட் பூமிக்கு பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். மேற்கண்ட சர்வே எண்களுக்கான பட்டா யார் பெயரில் இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும். அய்யம்மாள் பெயரில் பட்டா எண்.7 இருக்கிறது. வீரமுத்து பெயரில் பட்டா எண்.163 இருக்கிறது. வாதியின் தகப்பனார் கந்தசாமி பெயரில் பட்டா எண்.27, 43 இருக்கிறது. மேற்கண்டவைகளை

நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. 60 ஆண்டுகளுக்கு முன்பு வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டதாக எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருக்கும் நிலையில் அதன் தேதி, மாதம், வருடம் என்னவென்றால் நினைவில்லை. நான் சொன்னது போல எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும், அவரவர்கள் ஜீவனத்திற்காக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வீடு கட்டி குடியிருப்பதாக நான் சாட்சியம் அளிக்கும் நிலையில் அந்த வீட்டின் வரி விதிப்பு எண் மற்றும் மின்சார இணைப்பு எண் ஆகியவைகள் தெரியுமா என்றால் தெரியாது.

6. பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதாக சொல்லியிருக்கிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. ஆனால் 60 ஆண்டுகளுக்கு முன்னர் பாகப்பிரிவினை நடந்தது எனக்கு தெரியும். 7ம் பிரதிவாதி 80 ஆண்டுகளுக்கு முன்னர் பாகப்பிரிவினை நடந்ததாக அவர் பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லியிருக்கும் நிலையில் நான் தற்போது 60 வருடங்களுக்கு முன்னர் பாகப்பிரிவினை நடந்ததாக தற்போது சாட்சியம் அளிப்பதிலிருந்தே எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்பதால் தான் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து 60 வருடங்களுக்கு முன்பு தான் பாகப்பிரிவினை நடந்தது.

7. பாகப்பிரிவனை பொறுத்து வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே பஞ்சாயத்து நடந்தது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரிந்து பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. இரண்டுமுறை பஞ்சாயத்து நடந்தது

என்றாலும், பஞ்சாயத்தின்போதும் நிலத்தை அளந்தபோதும் நானும் உடனிருந்தேன் என்றாலும், தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் பத்திரம் பதிவு செய்து கொண்டார்களா என்றால் இல்லை.

8. 7ம் பிரதிவாதி அவருக்கு பிரிந்த பாகத்தில் முத்து முனியப்பன்கோவில் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டி பராமரித்து வருவதாக சொல்லியிருக்கும் நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட UTR பட்டாவானது தவறுதலாக வழங்கப்பட்டது என்றாலும், வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும், நான் 7ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. 23.07.2025ம் தேதியன்று நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நான் என்ன சொல்லியிருக்கிறேன் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலம் எங்கு வைத்து யார் தயார் செய்தது என்றால் 7ம் பிரதிவாதி தயார் செய்தார். ஓமலூர் டைப் இன்ஸ்டிடியூட்டில் (Typing Institute) வைத்து தயார் செய்தார். அவர் சொன்னபடி தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் ஆமாம்.

<u>2, 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் மறுவிசாரணை</u>

1. வாதி எனது பெரிய தாத்தா மகன், ஆதாவது மாமன் மகன். 7ம் பிரதிவாதி எனது சின்ன தாத்தா மகன், ஆதாவது எனது மாமன் மகன்.

**<u>குறுக்கு விசாரணை இல்லை</u>**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.